சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 59/2010

பெயர் திரு. ரவி நாள்.26.02.2026
த/பெ. கோவிந்தராஜன்

<u>வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) வழக்கு சொத்து என் தகப்பனார் சம்பாதியத்தில் பெறப்பட்டதாகும். 5ம் பிரதிவாதி என் தாயார் இறந்து விட்டார் என்றால் சரிதான். அவர்களுக்கு வாரிசு சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவருக்கு 5 நபர்கள் வாரிசு. அவருக்கு நான், ஜோதி, சுமதி, மோகன் மற்றும் அருள்மொழி ஆகியோர் வாரிசுகள். வழக்கில் ஏ, பி என்று இரு பட்டியல்கள் சொத்து ஏன் குறிப்பிட்டுள்ளேன் என்றால், ஏ பட்டியல் சொத்து நானும், என் தாயாரும் பொது அதிகாரம் எழுதி கொடுத்த சொத்து. பி பட்டியல் சொத்து நான் மட்டும் பொது அதிகாரம் எழுதி கொடுத்த சொத்தாகும். நான் புதுச்சேரியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தை நான் நேரடியாக பராமரிக்க முடியவில்லை என்றால் சரிதான். அதனால் 1ம் பிரதிவாதிக்கு மனைகளாக பிரித்து விற்க பொது அதிகாரம் எழுதிக் கொடுத்தேன்.

2) 1ம் பிரதிவாதி தான் பொது அதிகார ஆவணத்தை தயார் செய்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் கீழ் நான் எவ்வித தொகையும் வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில்

உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை பெயரளவுக்கு எழுதிக் கொடுத்தேன். அந்த ஆவணம் பதிவு பெறாத கிரைய ஆவணம். அது **பி.த.சா.ஆ.1** (மேற்கண்ட ஆவணம் பதிவு பெறாத ஆவணம் என்பதால் வாதி தரப்பு வழக்கறிஞர் அதனைக் குறியீடு செய்ய ஆட்சேபணை எழுப்பினார். ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). பி.த.சா.ஆ.1 ல் 1 ஏக்கர் 36.5 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.த.சா.ஆ.1 படி நானும், 1 ம் பிரதிவாதியும் கிரையத் தொகையாக ரூ.3,07,125/- என்று கிரையம் பேசப்பட்டது என்றால் சரியல்ல.

3) பி.த.சா.ஆ.1ல் நான் கிரைய தொகையை பெற்றுக் கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் நான் கிரையத் தொகை வாங்கவில்லை. என்னிடம் காட்டப்படும் ரசீதில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. தற்போது சாட்சி அந்த ரசீதில் உள்ள கையெழுத்து தன்னுடையதா என்று தெரியாது என்று கூறுகிறார். அந்த ரசீது நான் 1ம் பிரதிவாதிக்கு தொகை பெற்றதற்காக எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 23.08.2005 ல் ரூ.1 லட்சம் பெற்று கொண்டு 1ம் பிரதிவாதிக்கு ரசீது எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அந்த ரசீதின் பின் புறம் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் இல்லை. 15.09.2005 ல் 1ம் பிரதிவாதி எனக்கு ஐசிஐசிஐ வங்கி காசோலையை ரூ.3,24,000 க்கு அளித்தார் என்றால் இல்லை. அந்த

காசோலையை ரத்து செய்து நான் ரொக்கமாக பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல. மொத்த கிரையத் தொகையையும் நான் பெற்றுக் கொண்டு நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகள் ஒரே இடத்தில் இல்லை என்றால் சரிதான், 3 இடங்களில் உள்ளன. புல எண் 286/3 ஏ 3 ன் எனக்கு 16 செண்ட் தான் சொந்தம் என்றால் சரிதான்.

4) வழக்கு ஏ பட்டியல் 4ம் இன சொத்தில் எனக்கு 38 செண்ட் தான் சொந்தம் என்றால் சரிதான். கிழக்கு கடற்கரை சாலைக்காக நிலங்கள் எடுக்கப்பட்டன என்றால் சரிதான். அதற்கு நஷ்ட ஈடு யார் வாங்கியது என்றால் இது வரை யாரும் வாங்கவில்லை. ஏ பட்டியல் சொத்துகள் சாலை அருகே இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை 2ம் பிரதிவாதி கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அது செல்லாது. கிரையத்தை ரத்து செய்ய சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அந்த ஆவணம் இல்லாமலே உள்ளது என்று பரிகாரம் கோரவில்லை. கிரையம் வாங்கியவர்களை நான் வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல.

5) பி பட்டியல் சொத்து தனியாக உள்ளதால் 1ம் பிரதிவாதியால் மனைகளாக பிரிக்க இயலவில்லை என்றால் சரியல்ல. பிரிக்க முடியாத காரணத்தால் தான் 1ம் பிரதிவாதி தன் மனைவியான 2ம் பிரதிவாதி பெயரில் கிரையம் எழுதினார் என்றால்

சரியல்ல. வழக்கு நிலுவையில் வழக்கு சொத்தை என் மனைவி பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதினேன் என்றால் சரிதான். அதனால் வழக்கு சொத்தில் எனக்கு உரிமை வராது என்றால் சரியல்ல. என் மனைவியை இவ்வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். செட்டில்மெண்ட் எழுதுவதற்கு எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பொது அதிகார ஆவணத்தை 1ம் பிரதிவாதிக்கு முழு உரிமையும் அளிப்பதாக கூறித்தான் எழுதிக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. அதனால் அந்த பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்ய எனக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

6) அதனால் தான் பி.த.சா.ஆ.1 தனியாக எழுதப்பட்டது என்றாலும், மொத்த கிரையத் தொகையும் 1ம் பிரதிவாதி கொடுத்து விட்டார் என்றாலும், அதற்காக நான் ரசீதுகள் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த ரசீதில் உள்ள கையொப்பம் என்னுடையது என்று சொன்னால் சரியல்ல. என்னடம் காட்டப்படும் 08.12.2005 தேதியிட்ட பதிவு செய்யப்படாத கிரைய ஆவணததில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது நான் பெயரளவில் எழுதிக் கொடுத்த ஆவணம் ஆகும். அந்த ஆவணம் **பி.த.சா.ஆ.2** (மேற்கண்ட ஆவணம் பதிவு பெறாத ஆவணம் என்பதால் வாதி தரப்பு வழக்கறிஞர் அதனைக் குறியீடு செய்ய ஆட்சேபணை எழுப்பினார். ஆட்சேபணைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). பி.த.சா.ஆ.2 யை நான் படிக்காமல் கையொப்பம்

போட்டு விட்டேன். கிரையத்திற்கான ஏற்பாடுகளை என் சகோதரர் ஏழுமலை ஏற்பாடு செய்தார். பி.த.சா.ஆ.2 ல் ஏழுமலை தான் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் அதை ஏற்படுத்தும் போது அவர் இல்லை. அவர் முன்னிருந்து ஏற்பாடு செய்து தான் அவர் சாட்சியாக கையோப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கும், என் சகோதரர் ஏழுமலைக்கும் எவ்வித விரோதமும் இல்லை.

**(1 மற்றும் 2 பிரதிவாதிகள் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )**